# குறுந்தொகையில் இறைச்சி

**முனைவர்.சி.ஜெயமுனி**

தமிழ்த்துறை, கௌரவ விரிவுரையாளர், இரண்டாம் சுழற்சி,

எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்

---

## முன்னுரை

சங்க காலப் பழந்தமிழ் நூல்களுள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு பெரும்பிரிவுகள் உள்ளன. அவற்றுள் எட்டுத்தொகையில் இக்குறுந்தொகை பண்டைக் காலத் தமிழர்களின் ஒழுகலாறுகளையும் பழக்க வழக்கங்களையும் கணவன், மனைவி காதல் வாழ்வினையும், அறம், மறம், மானம், உரிமை, செம்மை, வண்மை, தொழில், பண்பாடு ஆகிய சீரிய தன்மைகளையும் அறிந்து இன்புறத்தக்கதாகும். இனி இந்நூல் காட்டும் இறைச்சியினை காண்போம்.

## இறைச்சி - சிறு விளக்கம்

**'இறைச்சி தானே பொருட் புறத் ததுவே'** **தொல்:1175**

என்பது தொல்காப்பிய நூற்பா ஆகும். அதாவது இறைச்சி என்பது குறிப்புப் பொருள் வெளிப்படக் கூறப்பட்ட கருப்பொருள் புறத்தாகத் தோன்றும்.

## இறைச்சியின் இயல்பு

'இறைச்சி' என்பது கருப்பொருளின் புறத்தே தோன்றும் குறிப்புப் பொருள். அக்குறிப்புப் பொருள் தெரியும் திறன் உடையோர்க்குப் புலனாகும். இக்கருத்தினையே

**'இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே**
**திறத்தியல் மருங்கின் தெரியுமோர்க்கே'** **தொல் :1176**

என்று தொல்காப்பியர் கூறுவதைக் காணலாம்.

## இறைச்சி இடம் பெறும் இடங்கள்

தலைவி தலைவன்பால் கொண்ட மிகுதியான அன்பினால் அவன் பிரிந்த காலத்து வருந்தும் பொழுது அன்பு மிகுதியாவதற்கும், தலைவன் பரத்தையர் பிரிவு முதலிய இன்னாத செயல்களால் தலைவி வருந்தும் காலத்து அவன் பொறுமையை வற்புறுத்தலுகுமாகிய இடங்களில் இறைச்சி இடம் பெறுகின்றது. இதனைத் தொல்காப்பியர்

**‘அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்**
**வன்புறை யாரும் வருந்திய பொழுதே தொல்:1177**

என்று இறைச்சி இடம் பெறும் இடங்களைக் குறுந்தொகையில் காணலாம்.

## குறுந்தொகையில் இறைச்சி

அகப்பொருட் பகுதியினைப் பேசும் மக்கள் கருத்தைக் கருப்பொருள் வருணனையில் அமைத்துக் குறிப்பிற் புலப்படுமாறு வலியுறுத்தலைப் பலவிடங்களிலும் காணலாம். இவ்வழகு தமிழ்மொழிக்கே உரியது எனலாம். செம்பொருளினும் குறிப்புப் பொருள்களே அறிவுடையார்க்கு இன்பம் தருவதாகும்.

## களவை விரும்பும் காதலன்

தலைவன் வரைவினை நீட்டித்துக் கொண்டு இருக்கின்றான். அதனால் கவலையுற்ற தலைவியைத் தோழி தலைவன் விரைவில் வரைந்து கொள்ள வரவிருக்கின்றான் என்று நற்செய்தியினைச் செவிலி கூறியதாகக் கூறித் தேற்றுகின்றாள். இப்பாடலில் செவிலி தலைவனை பற்றிக் கூறும் பொழுது

**‘சினை தொறு தீம்பழம் தூங்கும் பலவின்**
**ஓங்கு மல நாடன்’ குறுந்:83**

என்று குறிப்பிடுகின்றான்.

அதாவது, தீம்பழம் சுவைத்து உண்ணும் தகுதியைப் பெற்றது போலக் களவு வாழ்க்கை பலரறியும் கற்பு வாழ்க்கையாக மாறும் பருவம் பெற்றது என்ற கருத்தை செவிலி கூறுவதாக அமைந்தாலும் கருப் பொருளாகப் பலாவை இப்பாடலில் கூறும் பொழுது, பலாப்பழத்தின் தன்மை இனிமை தரும் சுளைகளை அகத்தே கொண்டு இருந்தாலும், புறத்தே இன்னாத முட்களை உடையதாகக் காணப்படுகின்றது. எனவே பலாக்கனிகளையுடைய நாடன் என்றதனால் மனதில் வரைந்து கொண்டு இல்லறம் நடத்தும் இன்பம் கொண்டவனாயிருந்தாலும் அவன் புறச் செயல்களைப் பார்க்கும் பொழுது இன்னல்தரும் களவு வாழ்க்கையிலேயே காதல் உடையவன் போல காணப்படுகிறான் என்ற இறைச்சிப் பொருள் உள்ளது என உணர முடிகின்றது.

## தவறிழைக்காத தலைவன்

தலைவன் - தலைவி இருவருக்கும் தம்முள் கொண்ட காதல் எத்தகைய இடையூறுவரினும் அதனால் பிறழ்ச்சி அடையாது. காதல் வயத்தால் ஒன்று கூடுவார் தம் மனதிற்குச் சான்றாக வேறு யாரையும் எதிர்பார்ப்பதுமில்லை. அவரவர் உள்ளங்களே

சான்றுகள். களவொழுக்கத்திலேயே நெடுங்காலம் பயின்று கொண்டிருந்த தலைவன் கற்பு மணத்திற்குத் தயராகாமல் காலம் நீட்டிக் கொண்டு இருக்கின்றான். இதனால் வருந்திய தலைவி தோழியிடம்

**'யாரும் இல்லை தானே கள்வன்**
**தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ'** குறுந் :25

என்று கூறுகின்றாள்.

## தலைவனைப் போற்றும் தலைவி

தலைவன் தலைவியைப் பிரிந்து நெடுநாளாகிவிட்டது. நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்துள்ள தலைவனைக் கண்டும், காணாதவள் போல் தோழி அவனைப் பழித்துரைக்கின்றாள்.

அதனைப் பொறுக்காத தலைவி கூறுகின்றாள். நமக்கு இனியராயை தலைவர் செய்யும் இன்னாமையும் முடிவில் நமக்கு இனிமையோடும் என்று கூறுகின்றாள். தலைவி கூற்றாக அமையும் இப்பாடலில் தலைவனைக் குறிப்பிடும் பொழுது

**'கறிவளர் அடுக்கத் தாங்கண் முறியருந்து**
**குரங் கொருங் இருக்கும பெருங்க னாடன்'** குறுந்:288

என்று தலைவி கூறுகின்றாள். அதாவது தளிர் அருந்தும் குரங்கு மிளகுத் தளிரையும் தின்னுகின்றது. இத்தகைய இயல்புடைய குரங்கு வாழும் மலை நாட்டைச் சேர்ந்த தலைவனும் நல்லது செய்கின்ற பொழுது அவனை அறியாமல் சில தீச்செயல்களைப் புரிகின்றான். குரங்கு தான் உண்ணும் தளிரோடு அறியாமல் மிளகு, தயிரையும் சேர்த்து உண்ணுகின்றது. மிளகுத் தயிர் உறைப்புச் சுவையுடையதாய் இருந்தாலும், பிற தளிரைக் காட்டிலும் உடலுக்கு ஆக்கம் தருவது போல நமக்கு இன்பம் பயப்பதேயாகும் எனத் தலைவி உட்கருத்து அமையத் தோழியிடம் உரைப்பதை உணரமுடிகின்றது.

## தலைவியின் தவிப்பு

தன் துணையை இழந்து விலங்கும் உயிர் வாழாது என்ற இறைச்சியை மேற்கூறிய பாடல் வெளிப்படுத்த மற்றொரு பாடலோ, 'விலங்கு கூடத் தன் இணையோடு கூடி மகிழ்ச்சியாயிருக்க, நானோ துணை இன்றி இன்பமுன்றித் துன்புறலானேன்' என்று தலைவி கூற்றாக அமைகின்றது. அப்பாடலில் உள்ள குறிப்பு பொருளை

**'... செங்கா லுழந்தின்**
**ஊழ்ப்படு முதுகா யுழையினம் கவரும்'**

என்ற பாடல் வரிகளின் வழி அறியலாம். இன்னொரு பாடலில் தலைவனின் பிரிவால் தலைவி வருந்த அதற்குத் தோழி ஆறுதல் கூறுகின்றாள். ஆனால் தோழியின் அவ்வாறுதல் மொழிகளுக்கு உள்ளம் கலங்கியவளாய்த் தலைவி,

**'……..**
**அழாற்கோ இனியே நோய் நொந்துறைவி**
**மின்னின் நூவி இருங்குயில் பொன்னின்**
**உரை திகழ் கட்டளை கடுப்ப மாச்சினை**
**நறுந்தாது கொழுதும் பொழுதும்**
**வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே'**

என்று கூறுகின்றாள். இப்பாடலில் 'குயிலின் தூவி உரைகல் போன்று மின்னும்' என்று தோழியிடம் தலைவி கூறுகின்ற உட்குறிப்பு என்னவெனில் பூந்தாது படியும் பொழுது குயில் பொன்னிறம் பெறிலும் அந்நிறம் அதன் நிறமன்று அது பறக்கும் போது உதிர்ந்து விட எப்பொழுதும் அது கருங்குயிலாதலே இயல்பு. அது போல நினது ஆறுதல் சொற்களைக் கேட்கும் பொழுது யான் சிறிது ஆற்றுவேன் போலக் காணப்படுகின்றேன். பின்னர் உன் உரை மறைந்து விட என் நெஞ்சின் கண் இயல்பாயுள்ள துன்பமே வெளிப்படுகின்றது. யான் அழாது என் செய்வேன்? என்பதேயாகும். ஆக இவ்விரு பாடல்களில் தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவி, அவ்வருத்தத்தினை ஆற்றும் பொருட்டு உட்குறிப்புத் தோன்றும் வண்ணம் எடுத்துரைப்பது எண்ணி எண்ணி இன்புறத்தக்கதது. இங்ஙனம் தலைவனுடைய பிரிவால் தவிக்கும் தலைவியிடம் தலைவன் கொண்டுள்ள நட்பு எத்தகையது என்பதைக் காணலாம்.

## தலைவனின் நட்பு

தலைவனிடம் தலைவி கொண்ட நட்பினைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று

**'கலை தொட இழுக்கிய பூநாறு பலவுக் கனி**
**வரையிழி அருவி உண்துறைத் தரூஉம்**
**குன்ற நாடன் கேண்மை'** **குறுந்:90**

என்றுரைப்பதைக் காணலாம். அதாவது கலை தீண்ட வழுக்கி விழுந்த பழத்தை அருவி 'பின்னும் பயன்படுத்தும் நாடன் என்றதனால் தலைவனால் நம் சுற்றத்தைப் பிரிந்தோமாயினும் அவன் நம்மை வரைந்து கொண்டு இல்லறஞ் செய்து பயன்படுத்துவன்' என்ற குறிப்புப் பொருள் இருப்பதனைக் காணலாம்.

## உடன் போக்கு உணர்த்தும் வழி

தலைவி பெற்றோரால் இற்செறிக்கப்பட்டுவிட்டாள். அந்நிலையினைக் கூறும் தோழி முன்பு இனிமையாயிருந்த இவ்வூர் தற்பொழுது நமக்கு இனிமையைத் தருவதாயில்லை.

இனித்தமரின் நீங்கி தலைவனோடு சென்று அவன் மனையில் இன்பம் நுகர்தல் அன்றி வேறு வழியில்லை என்பதனைக் குறிப்பாகக் கூறுவதைக் குறுந்தொகை பாடல் வரிகள்

**'தண்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை**
**நாரை நிரை பெயர்ந் தயிரை யாரும்'** குறுந்:166

என்று குறிப்பிடுகின்றது. தோழி 'கடலருகே அமர்ந்து இருக்கும் நாரையைக் கடலலை மோதி நிலை பெயர்த்தலால், அந்நாரையினம் பறந்து வேறிடம் சென்று அயிரை மீனை இரையாகப் பெற்று உண்ணும் என்று கூறுவது குறிப்பாக இச்செறிப்பாலே நம் நிலை பெயர்த்தமிரின் நீங்கித் தலைவனோடு சென்று அவன் மனையில் இன்பம் பெறுதலின்றி வேறு வழியில்லை என்ற உட்பொருளை உணர்த்துவதேயாகும்.

## தலைவனின் பரத்தமை

தலைவி தலைவனிடம் நட்புக் கொண்டு அவனுக்காகத் தன் தமரையே பிரிந்து அவனுடன் உறைந்து இனிதே வாழுகின்ற காலத்திலேயும் தலைவன் பரத்தையர் பால் செல்கின்றான். அப்பொழுது ஊடல் தீர்க்கும வாயிலாகத் தூதர் வரும் பொழுது அத்தூதுவரிடம் தன் தலைவனைப் பற்றிக் குறை கூறினால் அது தலைவனுக்குப் பெருமையன்று என்று உணர்ந்த தலைவி, அவனுடைய பரத்தைமையைக் குறிப்பாகக் கூறித் தன் தோள் மெலிவை வெளிப்படையாகக் கூறுவதைக் குறுந்தொகைப் பாடல் ஒன்று

**'ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்**
**செவ்வீ மருதின் செம்ம எழாடு தாஅய்த்**
**துறை அணிந்தன்றவ ரூரே யிறையிஞ்**
**திலங்கு வளை நெகிழச் சாஅய்ப்**
**புலம் பணிந் தன்றவர் மணந்த தோளே'** குறுந்:50

என அருமையாக் சிந்தரிக்கின்றது. இதன் கண் தலைவர் தம் பரத்தையால் தாம் ஆடுந்துறையை அழகுபடுத்தினர். தாம் மணந்த என் தோளை மெலிவித்தனர் என்று தலைவி குறிப்பாகக் கூறுவதைக் காணலாம்.

## தலைவியின் தன்னேரில்லாக் காதல்

பரத்தையர் பால் சென்ற தலைவன் மீண்டும் தலைவியிடமே வந்து சேர்கின்றான். அப்பொழுது தலைவி

**'அணிற்பல் அன்ன கொங்கு முதிர் முண்டகத்து**
**மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப'** குறுந்:49

என்று அழைக்கின்றாள். அதாவது அணிற்பல்லைப் போன்ற முள்ளும் பூந்தாதும் உடைய முண்டகம் போலப் பரத்தமையும், இல்லற ஒழுக்கமும் ஒரு சேர உடையவனவாக இருந்தாலும்,

**‘இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயாகிய ரென் கணவனை**
**யானா கியர்நின் நெஞ்சு நேர் பவளே** குறுந்:**49**

என்று கூறுவதைக் காணலாம். இதன் வழியாகத் தலைவியின் தன்னிகரற்ற காதல் புலப்படுகின்றது. எத்தனை பிறவி எடுத்தாலும் எத்தனை பெண்களோடு உனக்கு தொடர்பு இருந்தாலும் உன் நெஞ்சில் இடம் பிடிப்பவள் நான் மட்டும் தான் என்று கூறுதன் மூலம் தலைவன் பால் கொண்ட அன்பில் உவகையும், உறுதியும் ஒரு சேர இருப்பதனை உணர முடிகின்றது.

இதன் மூலம் ‘குறுந்தொகையில் இறைச்சி’ என்ற தலைப்பில் இறைச்சி என்பதன் விளக்கத்தையும் அதன் இயல்பு மற்றும் இடம்பெறும் இடங்களையும் கண்டதோடு தலைவன் தலைவி அன்பு வாழ்க்கையில் தலைவனின் வேறுபட்ட குணங்களையும் தலைவியின் மாறாக் காதலையும் ஆறாத்துயரையும் இறைச்சிப் பொருள் மூலம் காணமுடிந்தது.

**அடிக்குறிப்புகள்:**


1. சு.வே.சுப்பிரமணியன - தொல்காப்பியம், மூலமும் உரையும்.
2. நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ் - குறுந்தொகை, மூலமும் உரையும்.